

பல்லாவரம் தொகுதியில் மாநகர இளைஞரணி சார்பில் அமைப்பாளர் சத்திய பிரபு தலைமையில் வே.கருணாநிதி வரவேற்புரையில் கோல்டு பிரகாஷ், பேராசிரியர் பிரபு ஆகியோர் முன்னிலையில் கலைஞர் நூலகத்தை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார். உடன் மீ.அ.வைத்திலிங்கம், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., பிரபு கஜேந்திரன், துணை மேயர் காமராஜ், பகுதிச் செயலாளர்கள் தா. ஜெயக்குமார், காமராஜ், நடராஜ், சேகர் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாநகர துணை அமைப்பாளர்கள் ,கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ முன்னிலையில் 200க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர் கழகத்தில் இணைந்தனர். உடன் மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் பி.டி. அன்பரசன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன் நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி , மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.



சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திருவண்ணாமலை மாநகராட்சிக்கு உட்பட்ட சமுத்திரம் பகுதியில் இலங்கை தமிழர்களுக்கான புதிய வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை ஆணையர் வள்ளாலர், மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ், சட்டமன்ற உறுப்பினர் மு.பே.கிரி, எ.வ.வே.கம்பன், கார்த்தி, வேல்மாறன், சி.ஜெரால்டு உள்பட அதிகாரிகள் நிர்வாகிகள் பலர் உள்ளனர்மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### கள்ளக்குறிச்சி – வாணாபுரம் – தென்பெண்ணை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு

# உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

சென்னை, அக்.14-

கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், தென்பெண்ணை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு

ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், திருவெண்ணெய்நல்லூர் நகரத்தைச் சேர்ந்த செந்தில் என்பவரின் மகன் செல்வன்.எத்திராஜ் (வயது 16) என்ற சிறுவன் 11.10.2025 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், கூவனூர் கிராமத்திலுள்ள தனது உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டு வாணாபுரம் வட்டம், திருவரங்கம் அரங்கநாதர் கோவிலுக்கு அருகிலுள்ள தென்பெண்ணை ஆற்றில் தனது நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் 12.10.2025 அன்று திருக்கோவிலூர் வட்டம், ஆவியூர் கிராமத்தில் மேற்படி சிறுவனின் உடல் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### வேளாண் விளைபொருட்களுக்கான 100 மதிப்புக் கூட்டு மையங்கள் அமைத்திட

# ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை மானியம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தகவல்!

சென்னை, அக்.14-

வேளாண் விளைபொருட்களுக்கான 100 மதிப்புக் கூட்டும் மையங்கள் அமைத்திட விண்ணப்பங்கள் வரவேற்பு; மதிப்புக்கூட்டும் மையங்கள் அமைத்திட அதிகபட்சமாக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும் என்று வேளாண்மை உழவர்நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

உழவர்களின் நலனைக் காத்து வேளாண் உற்பத்தியினை உயர்த்துவதோடு, விளைபொருள் வீணாகாமல் தடுத்து அவற்றை மதிப்புக் கூட்டி அதிக வருவாய் பெற்றிடவேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2025-26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், வேளாண் பொருட்களின் மதிப்புக்கூட்டுதல் மற்றும் பதப்படுத்தும் தொழில் துவங்கும் தொழில் முனைவோர்கள் மற்றும் நிறுவனங்களை ஊக்கப்படுத்த ஒரு சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இதன்படி, 10 கோடி ரூபாய் வரையிலான புதிய மதிப்புக்கூட்டுதல் திட்டங்களுக்கு முதலீட்டு மானியமாக 25 சதவீதமும், பெண்கள், தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள வட்டாரங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு (சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அட்டவணைப்படி), ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் கூடுதலாக 10 சதவீதம் ஆக மொத்தம் 35 சதவீதம் என்ற வகையில் அதிகபட்சமாக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். இது தவிர அனைத்துப் பிரிவினருக்கும் 5 சதவீத வட்டி மானியம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

இதற்கான, அரசாணை வெளியிடப்பட்டுள்ள நிலையில், அதிக அளவில் விண்ணப்பங்களைப் பெற, திட்டம் குறித்த விழிப்புணர்வினைப் பெருமளவு ஏற்படுத்துமாறு அனைத்து மாவட்ட வேளாண் விற்பனைத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் தொழில்கள் வேளாண்/தோட்டக்கலை விளைபொருட்களின் இரண்டாம் நிலை அல்லது மூன்றாம் நிலை பதப்படுத்தும் திட்டங்களாக இருக்கவேண்டும் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தும் வகையில் வேளாண் மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களில் குறிப்பாக விரைவில் அழுகக்கூடிய விளை பொருட்களில் (காய்கறிகள், பழங்கள், பூக்கள் போன்றவற்றில்) ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள மதிப்புக்கூட்டிய பொருட்களைத் தயாரிக்க ஏதுவான நவீன மதிப்புக் கூட்டும் மையங்கள் அமைக்க ஆர்வமுடைய தொழில் முனைவோர்களை மாவட்டங்கள் தோறும் தேர்வு செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**வங்கிக் கடன்: திட்ட அறிக்கை!**

திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்பு குறைந்தபட்சம் 5% ஆக இருக்க வேண்டும் மற்றும்



மீதமுள்ள தொகை வங்கிக் கடனாகப் பெறப்படவேண்டும் என்பதால், இவர்கள் வங்கிக்கடன் பெறத் தேவையான விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்க மாவட்ட அளவில் உள்ள ஆலோசகர்கள் உதவுவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் அவர்கள் வங்கிகளில் கடன் உதவி பெறுவதற்கான வழிமுறைகளை வழங்கவேண்டும் என்றும் வேளாண்மை விற்பனைத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது,

மேலும், இத்திட்டத்தின் பலன் தொழில் தொடங்க விருப்பம் உள்ள அனைவரையும் சென்றடையும் வகையில், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையிலான விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டங்கள், வங்கிகள் குழுக் கூட்டம் ஆகியவற்றிலும் எடுத்துரைக்க அறிவுரை வழங்கப்பட்டது. முதன்மை வங்கிகளின் கிளை மேலாளர்களை நேரடியாக அணுகி, இத்திட்டம் குறித்து எடுத்துரைக்கக் கூறப்பட்டுள்ளது.

**தரமான உற்பத்திப் பொருட்கள்!**

வங்கியில் கடன் ஒப்புதல் பெறப்பட்டபின், மானியம் பெறுவதற்கான அவர்களுடைய விண்ணப்பங்கள் மாவட்ட தொழில்நுட்பக் குழு மற்றும் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழுவால் உடனடியாக மதிப்பாய்வு செய்யப்பட்டு தகுந்த விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, வேளாண், தோட்டக்கலை விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்துதல் போன்ற தொழில்களை மேற்கொண்டு தரமான உற்பத்திப்பொருட்களை உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளில் விற்பனை செய்து பொருளாதார ஏற்றம்பெற ஆர்வமுள்ள அனைத்து தொழில்முனைவோர்களும் 100 மதிப்புக்கூட்டும் மையங்கள் அமைத்திட அரசின் மானிய உதவியுடன் செயல்படுத்த உள்ள இத்திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

### மு.க.தமிழரசு, நே.சிற்றரசு, தயாநிதி மாறன், அன்பகம் கலை, எழிலன் நாகநாதன், சைதை சாதிக் பங்கேற்பு!

# 109 (அ) வட்ட பாக பொறுப்பாளர்கள் - பாகத் தலைவர்கள் BLA2 ஆலோசனைக் கூட்டம்!

## ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, அக்.14-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் -முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 109 (அ) வட்ட பாக பொறுப்பாளர்கள் மற்றும் பாகத் தலைவர்கள் BLA2 ஆலோசனைக் கூட்டம் இன்று (14.10.2025 - செவ்வாய்கிழமை) மாலை 6.00 மணிக்கு பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது.

இக்கூட்டத்தில் மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், தேர்தல் பொறுப்பாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளனர்.

எனவே வட்ட கழக செயலாளர் மற்றும் 109 (அ) வட்டத்துக்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை விடுத்துள்ளார்.



திராவிட இயக்க கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, சென்னை – கீழ்கட்டளை பகுதியில், கழக மண்டலக் குழுத் தலைவர் ஜோசப் அண்ணாதுரை முன்னிலையில், வட்டச் செயலாளர் ரங்கநாதன் தலைமையில், முரசொலி ஊழியர் திருமதி பி.விஜயலட்சுமி ஏற்பாட்டில் 100க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சிகளின் மகளிர் கழகத்தில் இணைந்தனர்.

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ தலைமை! தியாகராயர்நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

# இளைஞர் அணி பாகப் பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சிறப்புரை!

சென்னை, அக். 14

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இளைஞர் அணி மற்றும் BDA பாகப் பொறுப்பாளர்கள்,நிர்வாகிகள்ஆலோசனைக் கூட்டம் இன்று (14.10.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணிக்கு, தியாகராயர் நகர், பாண்டிபஜார், சர்பிட்டி தியாகராயர் கலையரங்கத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ., தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தியாகராயர் நகர் தொகுதிப் பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, கழக வர்த்தக அணி துணைத் தலைவர் எஸ். மோகன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

எனவே தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இந்நாள் முன்னாள் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கி ன்றனர்.

இந்நிகழ்ச்சியில் பி.ஜெய்குமார், தி.நகர் பி.மாரி, வடபழனி டி.கமல், தட்சன் ஹரிஹரன், ந.மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங்ராஜா, எம்.எஸ்.பழனி, மு.செல்வகுமார், மு.ம.செந்தில்கு மார், வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.சக்திவேல், ஜி.பி.செந்தில் குமரன், லலிதா புரம் என். துரை, வழக்கறிஞர் எஸ்.லட்சுமிகாந்தன் ஆகியோர் நிகழ்ச்சியின் இறுதியில் நன்றி கூறுகின்றனர்.



கழக வழக்கறிஞர் மெ.கவிகண்ணனின் தந்தை தேவனூர் சா.மெய்யழகன் அவர்களின் படத்திறப்பு நிகழ்வில் போக்குவத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அன்னாரது படத்திற்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் வட்டக் கழக நிர்வாகிகள் இருந்தனர்.




பா.ஜ.க தொடர்ந்த பொய் வழக்கு கடந்த 16 ஆண்டுகளாக சைதை 11வது பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், நேற்று, நீதியரசர் ராம்குமார், பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரையும் வழக்கில் இருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தார். இவ்வழக்கில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆலோசனையின் பேரில் கழக வழக்கறிஞர்கள் ஜெ.தூயமணி, சைதை ஆ.தேவக்குமாரன், திருநாவுக்கரசு ஆகியோர் ஆஜராகி வாதாடினர்.

# வளவனூரில் த.வெ.க.வினர் கழகத்தில் சேர்ந்தனர்!

விழுப்புரம், அக். 14 -

விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் முன்னிலை யில் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, வளவனூர் பேரூராட்சியில் தமிழக வெற்றிக் கழகம் கட்சியைச் சேர்ந்த 50ற்கும் மேற்பட்ட இளை ஞர்கள் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

இதில் தொகுதி பார்வையாளர் துரை.கி.சரவணன், இரா. ஜனகராஜ், செ. புஷ்பராஜ், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், தயா. இளந்திரை யன், பா.ஜீவா, சுவை சுரேஷ், ப.அன்பரசு மற்றும் கழக நிர்வாகி கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அம்பத்தூர் பா. இரவைக்கண்ணன்

### அக்டோபர் 14 (1992)



**அம்பத்தூர் நகரக் கழகத்தின் செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார். மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.**

**துணிவுமிக்க உள்ளம்! பணிவுமிக்க பண்பாடு! கொள்கையில் உறுதி! குறிக்கோளுக்காக தியாகம் செய்யும் இயல்பு! என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**